**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KRISHNAGIRI**

**<u>OS No. 81/2020</u>**

**PW.1** is solemnly affirmed on **14.09.2023** in accordance with the provisions of the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. கணேசன் (வங்கி மேலாளர்) | Father Name | திரு. ரமணி |
| Village | | Taluk | |
| Religion | | Calling | |
| | | Age | |

**<u>முதல் விசாரணை :</u>**

இவ்வழக்கில் நான் வாதி வங்கியில் மேலாளராக பணிபுரிகிறேன். வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். பிரதிவாதிகள் 2011 ல் விவசாய கடன் ரூ.5 இலட்சம் எங்கள் வங்கியில் வாங்கியிருந்தார்கள். அதை திருப்பி செலுத்தவில்லை. ஆகையால் இந்த வழக்கு எங்கள் வங்கி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கை பொறுத்து தற்போது வங்கி மேலாளராக நான் பணிபுரிவதால் சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ளது என்னுடைய கையொப்பம்தான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி, எங்கள் வங்கி வழக்கறிஞர் தயாரித்ததுதான்.

எனவே, அதனை என்னுடைய சாட்சியமாக கருத வேண்டுகிறேன். எங்களது வங்கி தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) 23.11.2011ம் தேதியில் 1, 2 பிரதிவாதிகள் எங்கள் வங்கிக்கு எழுதி கொடுத்த விண்ணப்பத்தின் அசல்.

2) 24.11.2014ம் தேதியில் 1, 2 பிரதிவாதிகள் எங்கள் வங்கிக்கு எழுதி கொடுத்த பிராமிசரி நோட்டின் அசல்.

3) 24.11.2011ம் தேதியில் 1, 2 பிரதிவாதிகள் எங்கள் வங்கிக்கு எழுதி கொடுத்த லெட்டர் ஆப் ஐபோதிக்கேசனின் அசல்.

4) 24.11.2014ம் தேதியில் 1, 2 பிரதிவாதிகள் எங்கள் வங்கிக்கு எழுதி கொடுத்த கடன் ஒப்புகை கடிதத்தின் அசல்.

5) 06.10.2017ம் தேதியில் 1, 2 பிரதிவாதிகள் எங்கள் வங்கிக்கு எழுதி கொடுத்த கடன் ஒப்புகை கடிதத்தின் அசல்.

6) 17.02.2020ம் தேதியிட்ட கடன் திரும்ப கோரும் சட்ட அறிவிப்பு அலுவலக நகல்.

7) வங்கி கணக்கு பேரேட்டு நகல்.

8) 14.07.1986ம் தேதி திம்மராயன் ஜெயலட்சுமிக்கு எழுதி கொடுத்த கிரய ஆவணத்தின் அசல் (ஆவண எண். 911/1986).

9) 12.08.2011 - பழைய ஆ பதிவேட்டின் அசல்.

10) 16.08.2011 - கணினி பட்டா.

11) 19.08.2011 - அடங்கல் .

12) 22.08.2011 - கிராம நிர்வாக அலுவலரின் சான்று.

13) 30.08.2011 தேதியிட்ட வில்லங்க சான்றின் அசல் (ஆவண எண். 3457/2011).

14) 21.05.2010ம் தேதியிட்ட ஜெயலட்சுமி அசோகனுக்கு எழுதி கொடுத்த கிரய ஆவணத்தின் அசல் (ஆவண எண். 1558/2010)

15) 23.09.2011 தேதியிட்ட கிராம நிர்வாக அலுவலரின் சான்று.

16) 15.09.2011 தேதியிட்ட வில்லங்க சான்றின் அசல் (ஆவண எண். 3738/2011).

17) 15.09.2011 தேதியிட்ட Memorandum of Deposite of Title Deeds Original (Document No. 3642/2011)

எனது நிருபண பிரமாண வாக்குமூலத்தையும், என் வங்கி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்சொன்ன ஆவணங்களை வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17 ஆக குறியீடு செய்து ஏற்றுக்கொண்டு, வழக்கை அனுமதித்து உத்தரவிட வேண்டுகிறேன்.

Taken down by me in open Court interpreted/read over to the witness and acknowledged by him/her to be correct.

M SUMATHI SAI PRIYA

Principal District Judge
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Location: Krishnagiri

Principal District Judge,
Krishnagiri.